# அறிவித்தல் இல. R/2026/12

## வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழ்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026

அமைச்சரவை அலுவலகத்தின் செயலாளர் அவர்களின் CP/DEC/25ம் இலக்க 2025.02.27ம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ள 2025.02.19ம் திகதிய அமைச்சரவைக் கூட்ட தீர்மானம் மற்றும், அவர்களின் சம இலக்க 2025.07.16ம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ள 2025.07.07ம் திகதிய அமைச்சரவைக் கூட்ட தீர்மானம் ஆகியவற்றின் பிரகாரமும் வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் NP/30/01/01/Recruit/Dept/01 ஆம் இலக்க 2026.06.05ம், 2026.06.08ம் திகதிய கடிதங்கள் மூலம் சிபார்சு செய்யப்பட்டு வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரின் NP/04/01/S.M/Gen/2026 ஆம் இலக்க 2026.06.11ம் கடிதம் மூலமான கோரிக்கைகமைவாகவும் மற்றும், பிரதம செயலாளரின் NP/17/Cad/02/17/Vol.III ஆம் இலக்க 2026.05.25ம் இலக்க கடிதம், கௌரவ ஆளுநரின் செயலாளரின் G/NPC/A8/Approval/2025/017 ஆம் இலக்க 2026.06.01ம் ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் கௌரவ ஆளுநரினால் வழங்கப்பட்ட விசேட அனுமதி ஆகியவற்றுக்கமைவாக வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழ்வரும், **அட்டவணை - I** இல் காட்டப்பட்டுள்ள பதவிகளுக்கு நிலவும் வெற்றிடங்களுக்கு திறந்த போட்டிப் பரீட்சை அடிப்படையில் **இந்த ஒரு தடவை மட்டும் வலுப்பெறும் வண்ணம்** விசேட ஏற்பாடுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இதற்கமைய, இவ் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளையுடைய விண்ணப்பதாரர் விண்ணப்பிக்க முடியும். போட்டிப் பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் **2026 யூலை மாதமளவில்** யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2026.07.03** ஆகும்.

➢ **அட்டவணை – I**

| பதவி இல. | பரீட்சையின் பெயர் | நியமிக்கப்படவுள்ள ஆளணி எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| 01. | வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழான **மேற்றன் (Matron) தரம் III** பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026 | **01** | **01** |
| 02. | வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழான **இல்லத்தாய் (House Mother) தரம் III** பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026 | **-** | **11** |
| 03. | வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழான உதவி மேற்றன் **(Assistant Matron) தரம் III** பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026 | 01 | 03 |
| 04. | வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழான **உதவி விடுதிக் காப்பாளர் (Assistant Warden) தரம் III** பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026 | 01 | - |
| 05. | வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழான **உதவி இல்ல ஆசிரியர் (Assistant House Master) தரம் III** பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026 | 01 | - |
| 06. | வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழான **உதவி இல்ல ஆசிரியை (Assistant House Mistress) தரம் III** பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026 | - | 01 |

| | | | |
|---|---|---|---|
| 07. | வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழான **தொழிற்பயிற்சிப் போதானாசிரியர் (Vocational Instructor)** தரம் **III** பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026 | *01* | *01* |

## 01. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-

01.1. வடக்கு மாகாண கௌரவ ஆளுநரால் அனுமதிக்கப்பட்டு 2025.07.07ம் திகதி முதல் செயல்வலுவிலுள்ள மேலே, **அட்டவணை - I** இல் காட்டப்பட்டுள்ள பதவிகளுக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளிற்கு அமையவும், **இதற்கு மேலதிகமாக கௌரவ ஆளுநரால்** தொழிற்தகைமை தொடர்பில் வழங்கப்பட்ட சம இலக்க 2026.06.01ம் திகதிய **விசேட அனுமதிக்கமையவும்,** தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30ம் இலக்க 2013.07.03ம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கு உட்பட்டு, ஒவ்வொரு பதவிகளுக்குமாகத் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் குறித்த பதவிகளின் **தரம் III** இற்கு நியமிக்கப்படுவர்.

01.2. இப் பதவிகளின் பொருட்டான பரீட்சை மூலம் நியமனத்திற்கு தகைமை பெற்ற பரீட்சார்த்திகள், சேவைப்பிரமாணக் குறிப்பில் விதித்துரைக்கப்பட்ட வகையில், மூன்று (03) வருட தகுதிகாண் கால அடிப்படையில் **தரம் III** பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவிகள் ஒவ்வொன்றும் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். எனினும், நியமனமானது ஒய்வூதியப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைவான, நலன்களை உரித்துடையதாக்கப்பட்டே மேற்கொள்ளப்படும்.

01.2.1. எவ்வாறாயினும் மேலே அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டவாறு 01 தொடக்கம் 06 வரையான பின்வரும் பதவிகளுக்கு தரம் III இல் நியமனம் செய்யப்பட்டவர்கள் நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருட காலத்திற்குள் அப்பதவிக்குரிய **இணைப்பு I** காட்டப்பட்டுள்ள தொழிற்தகைமையினை குறித்த 03 வருட முடிவுத்திகதிக்குள் பூர்த்தி செய்தல் வேண்டும். உரிய தொழிற்தகைமையினை பூர்த்தி செய்யாது விடின் அச்சந்தர்ப்பத்தில் நியமனம் முடிவுறுத்தப்படும். எக்காரணம் கொண்டும் இக்காலப்பகுதி நீடிக்கப்படமாட்டாது.

- **01.** மேற்றன் (Matron)
- **02.** இல்லத்தாய் (House Mother)
- **03.** உதவி மேற்றன் (Assistant Matron)
- **04.** உதவி விடுதிக் காப்பாளர் (Assistant Warden)
- **05.** உதவி இல்ல ஆசிரியர் (Assistant House Master)
- **06.** உதவி இல்ல ஆசிரியை (Assistant House Mistress)

01.2.2. தொழிற்பயிற்சிப் போதானாசிரியர் (**Vocational Instructor**) பதவிக்கு பிரிவு 04 இல் குறிப்பீடப்பட்டதற்கமைய தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

01.2.3. மேலே அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டவாறு 01 தொடக்கம் 06 வரையான பதவிக்கான சேவை அனுபவம் தொடர்பாக 2026.06.05 ஆம் திகதிய NP/30/01/01/Recruit/Dept/01 ஆம் இலக்க நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம், கல்வித்தகைமையுடன் மட்டும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் விண்ணப்பதாரிகள் மூன்று ஆண்டுகளுக்குள் தங்கள் தொழிற்தமைமையைப் பூர்த்தி செய்யும் போது அவர்களுக்கான **சேவை அனுபவத்தினை பூர்த்தி செய்வதற்கு,** உரிய திணைக்களத்தனால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

01.2.4. சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு மேற்குறித்த பதவிகளின் தரம் III இற்கு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருட காலத்திற்குள் அப்பதவிக்குரிய முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

01.3. இச்சேவைகள் இடமாற்றத்திற்குட்பட்ட சேவைகளாகும். இதனால், இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்குக் கீழ்ப்படிதல் வேண்டும்.

01.4. ஒவ்வொரு பதவிக்குமான நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். இப் பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை **அட்டவணை – I** இல் காட்டப்பட்டுள்ளது. எனினும், அறிவிக்கப்பட்ட இவ் வெற்றிடங்கள் தொடர்பில் பகுதியளவு வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

01.5. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமையவும், நியமனத் திகதியிலிருந்து **மூன்று (03)** வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

## 02. சம்பள அளவுத்திட்டம் :-

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 1 - 2025**க்கு ஏற்ப **அட்டவணை - I இல்** காட்டப்பட்டுள்ள **தரம் III** பதவிகளுக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டமானது ரூபா. **45,230 - 10 x 540 - 11 x 630 - 10 x 890 - 10 x 1,190 - 78,360** ஆகும். (இவ் அளவுத்திட்டத்தின் நான்காவது படிநிலையை அடைய முன் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் **அட்டவணை - III** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக விதித்துரைக்கப்பட்ட சம்பளம் இப்பதவியின் பொருட்டு வழங்கப்படும்.

## 03. பொதுவான தகைமைகள் :-

03.1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

03.2. விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் தனது பதவிக்குரிய கடமைகளை ஆற்றுவதற்குகந்த சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராகவும் சிறந்த நன்னடத்தை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

03.3. விண்ணப்பதாரி இவ் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்னரான ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது தொடர்ச்சியாக மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (நேர்முகப் பரீட்சையின் போது தமது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கு **தமது தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)**

**அல்லது**

விண்ணப்பதாரி அல்லது அவரது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன், வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக ஐந்து (05) ஆண்டுகளாயினும் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (நேர்முகப் பரீட்சையின் போது தமது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கு **தமது தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)**

3.4. வயதெல்லை:- விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3.5. விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இப்பதவிக்காக கோரப்பட்ட **சகல தகைமைகளையும்** விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும்.

## 04. ஒவ்வொரு பதவிக்குமான கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற்தகைமைகள்

| பதவி இல. | பதவி | கல்வித்தகைமை | தொழிற்தகைமை |
|---|---|---|---|
| 01. | **மேற்றன் (Matron)** ஆண் / பெண் | க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் ஒரே அமர்வில் தமிழ் / சிங்களம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலான நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். **அத்துடன்** க.பொ.த (உ/த) பரீட்சையில் யாதாயினும் ஒரு துறையில் ஆகக்குறைந்தது ஒரு பாடம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பொதுச் சாதாரண பாடம் நீங்கலாக) | பொருத்தமற்றது (பந்தி 01.2.1 க்கமைவாக) |
| 02. | **இல்லத் தாய் (House Mother)** | | |
| 03. | **உதவி மேற்றன் (Assistant Matron)** ஆண் / பெண் | | |
| 04. | **உதவி விடுதிக் காப்பாளர் (Assistant Warden)** ஆண் / பெண் | | |
| 05. | **உதவி இல்ல ஆசிரியர் (Assistant House Master)** | | |
| 06. | **உதவி இல்ல ஆசிரியை (Assistant House Mistress)** | | |

| இல. | பதவி | கல்வித்தகைமை | தொழிற்தகைமை |
| --- | --- | --- | --- |
| 07. | தொழிற்பயிற்சிப் போதானாசிரியர் **(Vocational Instructor)** **ஆண் / பெண்** | . பொ.த (சா/த)ப் பரீட்சையில் **ஒரே** அமர்வில் **தமிழ் / சிங்களம்** மற்றும் **கணிதம்** ஆகிய பாடங்கள் உள்ளடங்கலான **நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆகக்குறைந்தது ஆறு (06)** பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அத்துடன்**<br><br>க.பொ.த (உ/த) பரீட்சையில் யாதாயினும் **ஒரு துறையில் ஆகக்குறைந்தது ஒரு** பாடம் **சித்தியடைந்திருத்தல் வேண்டும்.** (பொதுச் சாதாரண பாடம் நீங்கலாக) | விண்ணப்பதாரர் **வாகனம் திருத்தும் (Automobile Mechanic) துறையில்** அரச நிறுவனம் அல்லது இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் **ஒரு வருடத்திற்கு குறையாத தொழில் அனுபவச் சான்றிதழினை** பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அத்துடன்**<br>விண்ணப்பதாரர் அரச தொழில்நுட்ப கல்லூரி / தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை **(NAITA)** / இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை அல்லது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதாவது ஒரு நிறுவனத்தில் **ஒரு வருடத்திற்கு குறையாத முழு நேர வாகனம் திருத்தும் தொழிற்பயிற்சி பாடநெறியினை (NVQ Level – 4)** பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |

## 05. ஆட்சேர்ப்பு முறை :-

05.1. இவ்விண்ணப்ப முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கோரப்பட்டுள்ள சகல தகைமைகளையும் விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் முன்னறிவித்தல் எவையுமின்றி நிராகரிக்கப்படும்.

05.2. மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் நியமிக்கப்படவுள்ள எண்ணிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வகுதிகளுக்கமைவாக (ஆண் / பெண்) பெற்ற மொத்தப்புள்ளிகளின் உயர் புள்ளி ஒழுங்கு வரிசையில் **(Merit Order)** நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். நியமனத்தின் பொருட்டான தகைமைகள், ஆவணங்கள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரிய வந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

## 06. பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி, பரீட்சைக் கட்டணம் ரூபா. 500.00 ஐ **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** என்ற பெயருக்குக் கிடைக்கக்கூடியவாறாக வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள யாதாயினுமொரு பிரதேச செயலகமொன்றில் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 07. விண்ணப்பிக்கும் முறை :-

07.1. இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப் படிவங்களில், தாம் விண்ணப்பிக்கும் பதவிக்குப் பொருத்தமான படிவத்தினை தரவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து, **விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

07.2. ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ஒவ்வொரு பதவிக்குமென தனித்தனியான விண்ணப்பங்களையே சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், பரீட்சைக் கட்டணங்களும் ஒவ்வொரு பதவிகளுக்குமென தனித்தனியாக செலுத்தப்பட்டு பெறப்பட்ட பற்றுச்சீட்டு விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

07.3. விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"அட்டவணை - I இல் காட்டப்பட்டமைக்கு அமைவாக, தாம் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர்"** குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

07.4. விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். எவ்வாறாயினும், **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படுதலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.**

07.5. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில், அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. எனினும், விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி

செய்திராத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம் என்பதுடன், நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பில் உரிய விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

07.6. விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதும் பத்திரிகை அறிவித்தலொன்று செய்தியாக வெளியிடப்படும். குறித்த அறிவித்தல் வெளியாகி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் மூன்று (03) நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி, பின்வரும் விடயங்கள் உள்ளடங்கிய கோரிக்கைக் கடிதம் மூலம் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல: **021 221 9939** / தொலைநகல் இல: **021 221 9940** / மின்னஞ்சல்: **examppscnp@gmail.com**)

- பரீட்சையின் பெயர்.
- விண்ணப்பதாரியின் முழுப்பெயர்.
- தேசிய அடையாள அட்டை இலக்கம்.
- விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி.
- விண்ணப்பதாரியின் மின்னஞ்சல் முகவரி.
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி.
- விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி.
- பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி.

## 08. ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

08.1. பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை

(ii) செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.

(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை பரீட்சைக்கு தோற்றும்போது சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்த உரிமை **"செயலாளர் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** அவர்களின் தற்றுணிவின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக

மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

08.2. மேலும், பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடியவாறு முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகளை அணியவில்லையென்பதை உறுதிப்படுத்துவதற்காக இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். மேலும் அவ்வாறு உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

## 09. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருவாராயின், அவரது பரீட்சார்த்த உரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படுவர்.

## 10. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும். விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா.854,880.00 க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நெருங்கிய உறவினர் அல்லாத அரசாங்க நிரந்தர சேவை அல்லது மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்

## 11. பரீட்சைத் திட்டம் :-

இப் பரீட்சை கீழ்வருமாறு இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக அமையும். இது தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும். எனினும் தகைமையடைந்த சிங்கள மொழி மூல விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுமிடத்து சிங்கள மொழி மூலத்திலும் பரீட்சை நடாத்தப்படும். அத்துடன் விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

பாடவிதானங்கள் வருமாறு:-

| இல | வினாப் பத்திரம் | பாட விதானம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | நுண்ணறிவு பரீட்சை (Intelligence Test) | இவ் வினாத்தாள் எண்கணித (arithmetic), தர்க்கரீதியான திறன் (logical reasoning) மற்றும் பொது விவேகம் (general intelligence) தொடர்பாக விண்ணப்பதாரியின் அறிவைப் பரீட்சிக்கும் நோக்கிலானதாக அமையும். | 01 மணித்தியாலம் | 100 |
| 02 | மொழித்திறன் மற்றும் பொதுஅறிவு (Language Proficiency & General Knowledge) | சுருக்கம் எழுதுதல் (drawing of conclusions), கிரகித்தல் (Comprehension), பிழைகளை இனங்காணல் (detection of errors), இலக்கணப் பயன்பாடு (grammatical usage) மற்றும் பதவியுடன் தொடர்புடைய துறை தொடர்பான விண்ணப்பதாரியின் அறிவைப் பரீட்சிக்கும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும். | 01 ½ மணித்தியாலங்கள் | 100 |

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நியமனத்திற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது வீதத்தை (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர் புள்ளி வரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

## 12. பரீட்சைப் பெறுபேறுகள் :-

பரீட்சார்த்திகளுக்கான முழுமைப்படுத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபை இணையத்தளம் மூலம் வெளியிடப்படும் என்பதோடு, தமது தனிப்பட்ட பரீட்சைப் பெறுபேற்றினை www.np.gov.lk ⟶ **Exams & Recruitments** ⟶ **Results** எனும் தொடர்பின் ஊடாக பார்வையிட்டு தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

**கவனிக்கவும் :-**

(i) இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு.

(iii) இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் 021 221 9939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(iv) இவ் அறிவித்தலில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில், தமிழ் மொழி உரையே மேலோங்கும்.

(v) இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**ஆழ்வாப்பிள்ளை சிறி,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
**2026.06.12**

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

ஒவ்வொரு பதவிக்குமான நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருட காலத்திற்குள் பூர்த்தி செய்ய வேண்டிய தொழிற் தகைமைகள் :-

<table>
<tr><th>பதவி இல.</th><th>பதவி</th><th>தொழிற் தகைமை</th></tr>
<tr><td>01.</td><td>மேற்றன் (Matron)<br>ஆண் / பெண்</td><td rowspan="3">விண்ணப்பதாரர் இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து ஆகக்குறைந்தது ஆறு (06) மாதகாலத்தைக் கொண்ட “சிறுவர் மற்றும் ஆட்கள் பாதுகாப்பு தொடர்பான டிப்ளோமா” சான்றிதழ் கற்கை நெறியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.</td></tr>
<tr><td>02.</td><td>இல்லத் தாய் (House Mother)</td></tr>
<tr><td>03.</td><td>உதவி மேற்றன் (Assistant Matron)<br>ஆண் / பெண்</td></tr>
<tr><td>04.</td><td>உதவி விடுதிக் காப்பாளர் (Assistant Warden)<br>ஆண் / பெண்</td><td rowspan="3">விண்ணப்பதாரர் இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து ஆகக்குறைந்தது ஆறு (06) மாதகாலத்தைக் கொண்ட “சிறுவர் மற்றும் இளையோர் பாதுகாப்பு தொடர்பான டிப்ளோமா” சான்றிதழ் கற்கை நெறியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.</td></tr>
<tr><td>05.</td><td>உதவி இல்ல ஆசிரியர் (Assistant House Master)</td></tr>
<tr><td>06.</td><td>உதவி இல்ல ஆசிரியை (Assistant House Mistress)</td></tr>
</table>